தொழில்

இந்த இதழில்

தலையங்கம்	... 3
Letter to the editor	... 6
பாபுவும், ராஜன்பாபுவும்	... 7
அயரன் & ஸ்டீல் பேப்ரிகேட்டர்களின் கஷ்டங்கள்	... 9
அறிமுகம்	... 12
பண்டையத் தொழிலுக்கு கருணை காட்டுக	... 13
சென்னை ரர்ஜ்ய சிறு தொழில் வர்த்தகர் சம்மேளனம்	... 15
வடமதுரை மண்பாண்டத் தொழிலாளர்கள் மகாநாட்டுத் தீர்மானங்கள்	... 17
மீன் பிடி தொழிலுக்கு சர்க்கார் பாதுகாப்பு	... 18
எல்லாம் நடிப்பு (சிறுகதை)	... 19
கொடிக்கால் தொழில்	... 23
ராசி பலன்	... 25
சினிமா	... 28

V. RAMAIAH
MINISTER FOR ELECTRICITY

FORT ST. GEORGE
MADRAS

7—5—'58.



அன்புடையீர்,

தங்கள் பெருமுயற்சினல் ஆரம்பிக்கப் பட்டுள்ள "தொழில்" பத்திரிகையின் முதல் இதழ் கிடைக்கப் பெற்றேன். மிக்க மகிழ்ச்சி.

துரிதமாக வளர்ந்துவரும் நமது நாட்டுத் தொழில் துறையின் முன்னேற்றத்திற்கான பல நல்ல கருத்துக்களைத் தாங்கி, "தொழி லி"ன் ஒவ்வொரு இதழும் சிறப்புற வெளி வரவேண்டும் என்று, விரும்புகின்றேன்.

தங்கள் அன்புள்ள,

வெ. ராமையா

An opportunity will be more convincing

FOR

Steel Structural Fabrications,

Gates, Grilles, Storage Tanks,

Ferrous & non-ferrous Castings.

CONTACT :

BUILDERS INDUSTRIES,

MECHANICAL & STRUCTURAL ENGINEERS
IRON & BRASS FOUNDERS,

33, WALLTAX ROAD, MADRAS-3.

திண்டுக்கல்லில்

நம்பிக்கையான, தங்கம், வெள்ளி,
வைர நகைகள் வாங்குவதற்குச் சிறந்த இடம்
எதிர்பாருங்கள் !

வைர மாளிகை

உரிமையாளர் :
A. M. துரைராஜ் பிள்ளை.
மெயின் ரோடு,
திண்டுக்கல்.

"அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே!"

தொழில்

ஆசிரியர் : கே. பெருமாள் உடையார்

தொழில் 1	சென்னை, 15—5—58	இதழ் 2

தீப்பெட்டித் தொழில் தேய்கிறது!

பல லட்சக் கணக்கான மக்களுக்குப் பிழைப்பு அளித்து வரும் தீப்பெட்டித் தொழிலுக்கு அரசாங்கம் விதித்து வரும் வரிப்பளுவைப் பார்க்கையில், 'சுண்டைக் காய் கால்பணம்; சுமை கூலி முக்கால் பணம்' என்ற பழமொழி தான் நினைப்பு வருகிறது. ஒரு ரூபாய் உற்பத்திச் செலவு ஆகும் ஒரு குரோஸ் தீப்பெடிக்கு ரூ 3-4-0 வரிசெலுத்த வேண்டியிருப்பதாக அறிகிறோம். அதாவது உற்பத்திச் செலவை விட இரு மடங்குக்கு மேல் வரி! இது உண்மையிலேயே மிகவும் அநீதமானது! குடிசைத் தொழில் வளர்ச்சியே தம் லட்சியம் என்று கூறிவரும் அரசாங்கம் முற்றிலும் குடிசைத் தொழில் அடிப்படையில் நடைபெறும் தீப்பெட்டித் தொழில் மீது இவ்வளவு கடுமையான கலால் வரி விதிப்பதைப் பார்க்கும்போது யாருக்கும் அரசாங்கத்தின் லட்சியம் குறித்து சந்தேகம் ஏற்படத்தான் செய்யும். எனவே அண்மையில் அறிவிக்கப்பட்ட வரி உயர்வு ரத்து செய்யப்பட வேண்டுமென்று பலமாக வற்புறுத்துகிறோம்.

கலால் வரி இரண்டு ரூபாயாக இருந்த போது அரசாங்கம் ரூபாய்க்கு 2 அணா 'ரிபேட்' வழங்கி வந்திருக்கிறது. இப்போது ரூ 3-4-0 வரியாக இருக்கும்போது 10 ந. பை. மட்டுமே 'ரிபேட்' வழங்கப்படுகிறது. இதுவும் நியாயமல்ல. கைத்தறி ஜவுளிக்கு வழங்கப் படுவதுபோல, தீப்பெட்டிக்கும் மீண்டும் 2 அணா (அல்லது 12 ந. பை.) 'ரிபேட்' வழங்குவது தான் நேர்மை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறோம். மேலே சொன்ன 10. ந. பை. 'ரிபேட்' கூட,30, 50 தீக்குச்சிகள்கொண்ட பெட்டிகள் உற்பத்திசெய்பவர்களுக்குக் கிடையாதாம். எனவே குடிசைத் தொழில் முறையில் நடைபெறும் தீப்பெட்டித் தொழிலுக்கு உதவுவதற்காக 30, 50 குச்சிப் பெட்டிகள் உற்பத்திசெய்ய அனுமதியளித்துள்ளதாகக் கூறும் அரசாங்கம், 'ரிபேட்' வழங்க மறுப்பதன் மூலம் வலதுகையால் அளித்த உதவியை இடது கையால் தட்டிப் பறித்துக் கொள்கிறது! இது, இயந்திரத் தொழில் முறையில் நடைபெறும் தீப்பெட்டித் தொழிலுக்கு அரசாங்கம் மறைமுகமாக உதவி செய்வதாகும் என்ற கருத்துக்கும் இடம் கொடுக்கும்.

தென் பாண்டிய நாட்டில், அதாவது மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் தான் நெடுங்காலமாக தீப்பெட்டி உற்பத்தி குடிசைத் தொழிலாக நடைபெற்று வருகிறது. ஏற்கனவே பாகிஸ்தான், பர்மா, மலேயா, சிங்கப்பூர் போன்ற ஏற்றுமதி மார்க்கெட்டுகளை இழ

பாராட்டுகிறோம்!

தொழில் அமைச்சர் கனம் ஆர். வெங்கட்ராமன், எம். ஏ., பி. எல். சென்னை ராஜ்ய இரும்பு எஃகு, சாமான் உற்பத்தியாளர்களின் கஷ்டங்களை நன்கு அறிந்து, அவர்களின் தொழில் நடைபெற, சென்னை சர்க்காருக்கு பிரத்தியேகமான அலாட்மெண்ட் கிடைப்பதற்கு மத்திய அரசாங்கத்தாரிடம் வற்புறுத்துவதாக வாக்களித்துள்ளதற்காக தொழிலமைச்சர் அவர்களை மனதாரப் பாராட்டுகிறோம்.

ந்து தீப்பெட்டித் தொழில் அல்லல் படுகின்றது. முற்றிலும் உள்நாட்டுத் தேவையை மட்டுமே நம்பி, யந்திரத்தொழில் போட்டியையும் சமாளித்துக் கொண்டு குடிசைத்தீப்பெட்டித் தொழில் இன்று உயிர்வாழ்வதை ஆலைகளின் போட்டியைச்சமாளித்துக் கொண்டு, 'நித்திய கண்டமும் பூரண ஆயுளுமாக' வாழும் கை நெசவுத் தொழிலுடன் தான் ஒப்பிட முடியும். ஆலைத்துணிகளுக்கு 'செஸ்' விதித்து, கைத்தறிக்கு அரசாங்கம் உதவுவதுபோல ஆலைத் தீப்பெட்டிகளுக்கு 'செஸ்' வரி போட்டு குடிசைத் தொழில் முறையில் நடைபெறும் தீப்பெட்டி உற்பத்திக்கு உதவுவது பற்றி உடனே ஆராய்வதவசியம் என்று வற்புறுத்துகிறோம். இத்துறையில் மாநில சர்க்காருக்குப் பெரும் பொறுப்பு உண்டு என்பது நமது கருத்து.

கலால் வரிக்கும் சேர்த்து தீப்பெட்டிக்கு மத்திய விற்பனை வரி விதிக்கப் படுவதாக மற்றொரு புகார் இருந்து வருகிறது. வரிக்கு வரி விதிப்பதென்பது தர்ம நியாயப் படி மட்டுமல்ல; சட்டப் படியும் தவறு என்று சுட்டிக்காட்டவிரும்புகிறோம். சில ஆண்டுகளுக்கு முன்பு, மாநில விற்பனை வரிக்குக் கணக்கிடுகையில் விற்பனை வரியையும் விற்றுமுதலில் சேர்த்து வரி மதிப்பிடுவது தவறு என்று சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளதை அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வருகிறோம். வரிக்கு வரி போடுதல்; 30, 50 குச்சிபெட்டிகளுக்கு 'ரிபேட்' வழங்க மறுத்தல் ஆகிய இரண்டையும் மத்திய அரசாங்கம் தாமாகக் கைவிடாவிடில் தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் உயர்நீதி மன்றத்தில் வழக்காடி நியாயம் காண வழி இருக்கிறதென்பதே நம் கருத்து.

கடைசியாக மாநிலஅரசாங்கத்துக்கு ஒரு வார்த்தை. கைத்தறி நெசவின் நல்வாழ்வுக்காக எவ்வளவு வலிமையுடன் மாநில மந்திரிசபை போராடுகிறதோ, அவ்வளவு பலமாக தீப்பெட்டித் தொழிலின் நல்வாழ்வுக்கும் போராட வேண்டுவது கடமையாகும். மாறாக, குடிசைத்'தொழில் வளர்ச்சி, வேலை வாய்ப்பு அளித்தல்'

நாம்

1448447.

★

"தொழில்" முதல் இதழுக்கு வாழ்த்துக்களும், பாராட்டுக்களும் வழங்கியுள்ள அனைவருக்கும் நமது மனப்பூர்வமான நன்றி உரித்தாகுக!

"தொழில்" இதழுக்கு நாங்கள் எதிர் பார்த்ததை விட அமோகமாக தமிழ் மக்கள் நல்லாதரவு நல்கியுள்ளமை எங்களுக்குப் பெரும் மகிழ்வும் உற்சாகமும் அளித்துள்ளது. "தொழில்" தொடர்ந்து முன்னேறிப் பணிபுரியப் புத்துயிர் அளிக்கும் அருமருந்து மக்கள் ஆதரவுதான் என்று சொல்லத் தேவையில்லை. புதிய புதிய அம்சங்களைச் சேர்த்து தமிழ் மக்களுக்கு விருந்து படைப்பதே நமது நோக்கம். வரும் இதழ்களில் பல முற்போக்கு அம்சங்களைத் தாங்கி "தொழில்" மணம் பரப்புவதை வாசகர்கள் நுகரப் போகிறார்கள்!

தொழில், வாணிபத்துறைகளில் மட்டுமின்றி, இலக்கியத் துறையிலும் நல்லதோர் ஏடாக "தொழில்" விளங்க வேண்டும் என்பது எங்கள் பேரவா. சிறுகதை, தொடர்கதை, கலை முதலிய பகுதிகளும் விரைவில் இடம் பெறும். தொடர்கதையைப்பற்றிய அறிவிப்பு பிறிதோரிடத்தில் வெளியிடப் பெறுகிறது.

"தொழில்" முன்னேறுவதற்கான அரிய யோசனைகளையும், இளம் எழுத்தாளர்களின் இலக்கியப் படைப்புக்களையும் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். ஆசிரியரின் முகவரிக்கு அவை அனுப் பெறல் வேண்டும், "நாம்" பத்திமூலம் அவ்வப்போது வாசகப்பெருமக்களுடன் நாம் அளவளாவுவோம்.

வணக்கம்.

★ திருநெல்வேலிக்காரர்! ★

சுதந்திரப் போராட்ட நூற்றாண்டு விழாவை ஒட்டி வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் பிறந்து வாழ்ந்த இல்லத்தை சென்னை மாநில அரசாங்கம் நாட்டு உடமையாக்கிக் கொண்டது நினைவு இருக்கலாம்.

வ. உ. சிக்கு நினைவு மன்றம் நிறுவுவதற்காக ஒட்டப் பிடாரத்தில் அவரது இல்லம் இருந்த இடத்தில் கல் நாட்டு விழா நடைபெற்றது. விழாவில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் பேசுகையில் "திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலி" சீமையின் சீரையும் சிறப்பையும் எடுத்துக் கூறி பெருமை பாராட்டிக்கொள்ளத் தவறினார்கள் இல்லை!

கல் நாட்டு விழாவை நடத்தி வைத்து மாநில முதல் மந்திரி திரு. காமராஜ் அவர்கள் வ. உ. சியின் விடுதலைப் போராட்ட வீர வரலாறு பற்றி மிகவும் சிறப்பித்துக் கூறினார்.



"பேசியவர்கள் எல்லோரும் நெல்லை மாவட்டத்தின் சிறப்புப் பற்றிக் கூறி பெருமிதம் கொண்டார்கள். அந்தப் பெருமையில் எனக்கும் பங்குண்டு. ஒருவகையில் நானும் திருநெல்வேலிக்காரன்தான்! 'என்னடா, இவர் பிறந்த ஊர் விருதுநகர் ஆயிற்றே! அது ராமநாதபுரம் மாவட்டத்தில் அல்லவா இருக்கின்றது. இவர் எப்படி திருநெல்வேலிக்காரர் என்று உரிமை கொண்டாட முடியும்?' என்று கேட்கலாம். ஆனால் உண்மை என்னவென்றால் நான் பிறந்தபோது விருதுநகர், சாத்தூர் தாலுகாவில் நெல்லை மாவட்டத்தில் தான் இருந்தது; பின்னர்தான் பிரிக்கப் பட்டு இராமநாதபுரம் மாவட்டத்துடன் சேர்க்கப் பட்டது. எனவே பிறவியில் நானும் திருநெல்வேலிக்காரனே" என்று முதல் மந்திரி திரு.காமராஜ் அவர்கள் கூறியதும் விழாவுக்கு வந்திருந்த ஆயிரக் கணக்கான கிராமமக்கள் மகிழ்ச்சியால் விண்ணதிர கைத்தட்டி ஆர்ப்பரித்தனர்!

என்று சொல்லிக் கொண்டு, 'கீரைக்கடைக்கு எதிர்க்கடை' வைப்பதுபோல அரசாங்கம் தாமே தீப்பெட்டித் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவது, அல்லல்படும் குடிசைத் தீப்பெட்டித் தொழிலுக்குப் பாதகமே விளைவிக்கும். அரசாங்க உற்பத்தி சாலையில் தயாரிக்கப்படும் தீப்பெட்டிகளின் தரம் நன்றாயில்லை; மார்க்கெட்டில் விற்பனை ஆவதில்லை என்ற புகார் ஏற்கனவே கிளம்பியுள்ளது. இந்நிலையில் மேலும் பல இடங்களில் தீப்பெட்டித் தொழிற் சாலைகள் ஏற்படுத்தி வீண் நஷ்டத்துக்குள்ளாவது தானும் வாழாமல், பிறரையும் வாழ விடாமல் செய்வதாகவே வந்து விடியும் என்று எச்சரிக்கிறோம். மாநில அரசாங்கம் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதென்ற தம் பழைய முடிவை உடனே மாற்றிக்கொண்டு, எல்லாவிதங்களிலும் குடிசைத்தீப்பெட்டித் தொழிலுக்கு உதவ முன்வருவார்களாக! தீப்பெட்டித் தொழில் சம்பந்தமான அரசாங்கத்தின் கொள்கையை பிரிவினைச் சக்திகள் தம் வளர்ச்சிக்குப்பயன்படுத்திக் கொள்ளும் ஆபத்து உண்டு என்பதை மாநில, மத்திய அரசாங்கங்கள் உணர வேண்டும்.

LETTER TO THE EDITOR

Will the Government attend to the essential needs of the Iron and Steel-goods fabricators?

Everywhere the fabricators are crying for Mild Steel Rounds. This is an item indispensable for the manufacture of all sorts of consumer goods, such as buckets, pots, drums, sals, etc. which are required for the consumption of the general public.

This being the case, what is the use if the Government releases all categories of Iron and Steel materials excepting these most important M. S. Rounds? For the past one year this state of inadequacy prevails, and the Government does not seem to have taken the slightest notice of this.

The main reosan attributed to this want of material is that the stock position is not encouraging. In fact there is stock of M. S. Rounds and Squares, but these are distributed for the use of building constructions.

The Government is proclaiming that they are encouraging smallindustries. Their injustice to the fabricators,— who are in the line for ever so many years and depend upon this alone for their maintenance - by overlooking the needs for this business community is deplorable. At least 50% of the quantity received of this item by them should be distributed to the fabricators to enable them to finish the fabrication of their products.

The State Government should also press the Central Government to spare them adequate quantities of these Rods and Squares for fair distribution to the fabricators and and arrange for building contructions.

It is high time that the State Government takes up the matter immediately with the Central Government to ensure sufficient Quota Alloeation of the said varieties from the first quarter of 1958/59 at bast.

A. MOHAMED IBRAHIM,
Kumbakonam.
P. K. GOVINDASWAMY,
Madras.
M. KARUPPANNAN,
Dindigul.
Assistant Secretaries,
Madras State Iron & Steel Fabricators' Assn., Tiruchirapalli.

கிராமக் கைத் தொழில்கள் பற்றி

★ பாபுவும், ராஜன்பாபுவும் ★

— "ராதா" —

நம் தேசப் பிதாவும், நாட்டின் ஜனாதிபதியும் கிராமக் கைத்தொழில்கள்பற்றி, நாட்டின் முன்னேற்றத்தை முன்னிட்டும், சமத்துவசன்மார்க்க நெறிவை விரும்பியும், நாடு சுயராஜ்யம் அடைந்தபின் பொருளாதார பொலிவுடன் விளங்கவும் வேண்டி 1940-41-ம் ஆண்டில் நிர்மாண திட்டத்தின் கீழ் விரிவாக வகுத்து வரைந்துத் தந்திருக்கின்றார்கள். இதன்படி நடக்கவேண்டியது இந்நாட்டின் மக்களாகிய நம் கடமையாகும். அப்போது தான் நாடு சுபிக்ஷமடையும். நாம் அதற்கு வழிகோலியவர்கள் ஆவோம்.

மகாத்மா காந்தி அவர்கள் கூறுவதாவது:

கிராமக் கைத்தொழில்கள் கையால் நெல் அரைத்தல், கையால் மாவரைத்தல், சவுக்காரம் (சோப்) செய்தல்; காகிதம் செய்தல், தீப்பெட்டி செய்தல், தோல்பதனிடல், எண்ணெய்யாடுதல் முதலியவையாகும். இவையில்லாமல் கிராம வாழ்க்கையின் பொருளாதார நிலை பூர்த்தியாகாது. காங்கிரஸ்காரர்கள் (தற்போது மக்கள் என்று படித்துக் கொள்ளவேண்டும்) இவற்றில் சிரத்தைகொள்ள வேண்டும். இந்தக் கைத்தொழில்களுக்கு புத்துயிரளித்து புதுமுறையில் வளர்க்க வேண்டும். அவ்வாறு செய்து கிடைக்கும் பொருள்களையே உபயோகிப்பது தான் கௌரவம் என்று எல்லாரும் கருத வேண்டும். தேவை ஏற்பட்டால் கிராமங்களிலிருந்தே பொருள்களை தருவித்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் கிராம வாழ்வில் மனம் ஊன்றிவிட்டால் **நவ பாரதம்** உருக்கொள்வதற்குப் பொருத்தமாக உண்மையான தேசிய மனப்பான்மை நம்மிடையே வளர்ந்து வரும். வறுமையும், பட்டினியும், சோம்பலும் நீங்கும்.

நம் நாட்டில் தொழில், அறிவு ஆகிய இவ்விரண்டும் நல்ல முறையில் கலந்திருத்தல் வேண்டும். இதன்பயனாக தொழில் மேன்மேலும் வளரும். மதிப்பிட முடியாத பெரு நன்மையும் விளையும். இதை தொழிலாளர்கள் நன்கு உணரவேண்டும்.

ராஜேந்திரபிரசாத் அவர்கள் கருத்து வருமாறு:

கிராமத்தொழில்கள் எல்லாவற்றிலும் தலை சிறந்தது பயிர்த்தொழில். இது நம் உணவுக்குத் தேவையான பொருள்கள் எல்லாவற்றையும் கொடுக்கிறது; துணி நெய்வதற்கு மூலப்பொருளான பருத்தியை தருகிறது. ஆனால் கைத்தொழில் என்றால் கையால் பல வகைப் பொருள்களைச் செய்வதாகிய தொழிலையே குறிப்பதாகும். இவற்றை நாம் நன்றாகப் போற்றி வளர்க்கவேண்டும். கிராமங்களிலுள்ளவர்கள் தங்கள் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்து கொள்ளல் வேண்டும். நெல் குத்துதல், பயறு முதலிய தவசங்களை உடைத்துத்தோல்போக்குதல் ஆகியவைகளுக்காக மில்களை உபயோகிக்கக் கூடாது. கைகளினாலேயே செய்தல் வேண்டும். இவ்வாறு செய்யாது; மில்களை உபயோகித்துக் கொண்டால் வேலை இல்லாத் திண்டாட்டம் ஏற்படுகிறது. பொருள்களிலுள்ள வைடமின் (உயிர் சத்து) சீர்கெட்டு விடுகின்றது. இதை நாம் உணர வேண்டும்.

சர்க்கரைக்காக வேண்டி கரும்பு பயிரிடுதல், மற்றும் தேனீ வளர்த்தல் வேண்டும். தேனீக்கள் தேனைச்சேகரித்து தருகின்றன. இதிலிருந்து தானாகவே ஒருகஷ்டமுமின்றி சர்க்கரை கிடைக்கின்றது. ஆனால் கரும்பை பயிரிடுவதானால் அதிலிருந்து சாறு பிழிவதற்கு பழைய ஆலையையும், வெல்லம் காய்ச்சும் பழைய முறையையும் வழக்கத்திற்கு கொண்டு வருதல் வேண்டும்.

காய் கறிச் செடிகள், பழ வகை மரங்கள் ஆகியவை பயிரிடுதல் வேண்டும். எண்ணெய் விதைகளை பயிராக்குதல் தேவை; பருத்தியை உற்பத்தி செய்யவேண்டும்.

உணவு, உடைக்குப்பின் இருக்க வீடு கட்டுதல். கிராமத்திலிருக்கும் தொழிலாளர்களைக் கொண்டே வீட்டைக்

கட்டி முடிக்கவேண்டும். இவ்வாறு செய்தால் தான் கிராமத்தின் செல்வநிலை சீர்கெடாமலிருக்கும், சிக்கனம் ஏற்படும்.

நாம் ஒருபோதும் இயற்கையின் சரக்குகளை (நிலக்கரி, மண்ணெண்ணெய், இரும்பு போன்றவை) ஊதாரித்தனமாகக் காலி செய்யக்கூடாது. ஒருபோதும் தட்டு ஏற்படா வண்ணம் கிராமங்களில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டே **தொழில்களை வளர்க்க வேண்டும்.** எந்தெந்தப் பொருள் செலவழிந்து போனாலும், மீண்டும் புதியதாய் எளிதில் உண்டாக்க முடிகின்றவைகளையே பெரும்பர்லும் உபயோகிக்க வேண்டும்.

இவ்விதமாகக் கைத்தொழில்களுக்கு நாம் ஆக்கம் தரவேண்டும். புத்துயிர் அளிக்கவேண்டும். நாம் விழிப்பாயிருந்து நிலைமையை ஆய்ந்து செய்யும் வினைத் திட்டம் பெற்று வாழவேண்டும்.

நமக்கு வேண்டிய சில காரியங்களைச் செய்வதற்கு சில சமயம் ஆலைத் தொழில்முறை அவசியமாகலாம். ஆனால் எல்லாக் கிராமத்தொழில்களுக்கும் ஆலைகளைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது. அப்போதுதான் நம் நாட்டில் எல்லோருக்கும் நிச்சயம் வேலை தரமுடியும். இதைத் தொழிலாளர்கள் நன்றாக மனதில் வைத்துக கொள்ள வேண்டும்.

இந்தத் தொழில்களின் பெருக்கத்தை முன்வைத்தே **"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்"** தீட்டப்பட்டிருக்கின்றது என்பதை தொழிலாளச் சகோதரர்கள் உணர வேண்டும்.

★

Are you interested in purchasing Iron, Steel and Tin products such as Buckets, Fire Buckets, Sals, Pots, Drums, Suitcases, Bath - Tubs, Watering Cans, any kind of tin containers, etc. etc?

THEN WE OFFER OUR SERVICE TO YOU.

We are confident that our long experience in the manufacture of these and other allied products and supply against the orders of the 'Southern Railway and the Ministry of works, Housing & Supply will stand us in good stead to fulfil your valuable orders quickly.

PLEASE ADDRESS YOUR ENQUIRIES TO :

P. K. GOVINDASWAMY

(ESTD. 1944)

GOVT. APPROVED IRON & STEEL GOODS FABRICATOR.

46, Walltax Road, Madras-3-

The House for EFFICIENCY, SATISFACTION & PROMPTITUDE.

Grams: "IRONFABRIC", MADRAS

அயரன் & ஸ்டீல் பேப்ரிகேட்டர்களின் கஷ்டங்கள்

அடிஷனல் டைரக்டருக்கு வேண்டுகோள்

ஜனாப். பி. எச். மகமது நசுருதீன்
பொதுக் காரியதரிசி, சென்னை ராஜ்ய இரும்பு எஃகு சாமான் உற்பத்தியாளர் சங்கம், திருச்சி.

சென்னை இராஜ்ய இரும்புஎஃகு பேப்ரிகேட்டர்களுக்கு ஒதுக்கி இருக்கும் இரும்புஎஃகு அலாட்மெண்டு பங்கீடு முறையில் சரிவர உற்பத்திக் கேற்றவாறு ஒவ்வொருவருக்கும், காலதாமதம் இல்லாமல் பர்மிட் விநியோகம் செய்ய வேண்டும்.

உற்பத்தியாளர்களின் நிலைமை

சிறு தொழில்களைப் போலல்லாது இந்த இரும்பு எஃகு சாமான் உற்பத்தித் தொழில் மட்டும் தொண்ணூறு சதவிகிதம் நம்மால் நெடுநாள் தொட்டு பரம்பரையாகக் கடைப்பிடித்து வரப்படுகிற ஒரு தொழிலாகும். அத்தியாவசியப் பொருள் உற்பத்தியாளர் (consumer goods fabricators) களாகிய நாம், இந்தத் தொழிலையே கதி என்று நம்பி, இதனால் கிடைக்கும் வருமானத்தைக்கொண்டே நம் காலத்தைத் தள்ள வேண்டும் என்ற கொள்கையுடையவர்களாக இருந்து வருகின்றோம். அதனால் சிலர் பழமை காலந் தொட்டே ஏழ்மையில்உழல்பவர்களாகவும், பலர் பழமையில் சுமாரான நிலையிலிருந்து தற்காலத்தில் நிலை தவறி வாழ்பவர்களாகவும் தான் இருக்கிறோமே தவிர, முன்னேற்றம் கிட்டவில்லை. இதற்குக் காரணம் பலதரப்பட்டதாகும்.

கோட்டாவை உயர்த்த வேண்டும்.

உற்பத்தியாளர்கள் தங்கள் வாழ்க்கைக்கு இத் தொழிலையே நம்பி யிருப்பதால், அவர்கள் குடும்பங்களை நடத்தப் போதியவசதி அளிக்கக்கூடிய வகையில் அவர்களுக்கு கால் வருஷ பங்கீட்டை (quarterly quota) நிர்ணயித்து அவர்கள் தொழிலை தொடர்ந்து நடத்த சென்னை அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் உதவி புரிய வேண்டும். அவர்களுக்குத் தற்சமயம் கிடைத்துவரும் பங்கீட்டளவு மிகமிகக் குறைவாயிருக்கிறது. யாருக்கும் 5 டன்னுக்குக் குறைவாயிருந்தால் தொழிலை நடத்துவது மிகவும் கடினம்.

டிபக்டிவ் சரக்குகளில் 50 சத விகிதம் உற்பத்தியாளர்களிடமிருந்து ராஜ்ய சங்கத்திற்கு நேரடியாக அலாட்மெண்டு செய்யவேண்டும்.

உற்பத்தியாளர்களுக்கு எப்பொழுதுமே போதுமான மூலப்பொருள்கள் கிடைப்பதில்லை. டிபக்டிவ் சரக்குகள் அடிக்கடி மூலப் பொருள்கள் உற்பத்தியாளர்களிடமிருந்து வாகன் கணக்கில் கிடைப்பதை ரிஜிஸ்டர்டு ஸ்டாக்ஹோல்டர்களு (Registered Stock-holders) க்கு 50 சத விகிதமும் எங்கள் சங்கத்திற்கு 50 சத விகிதமும் கொடுத்தால், ஒவ்வொரு ஜில்லாவிலும் தேவையுள்ளவர்களுக்கு இரண்டாங்கால விலைக்கே கொடுத்துதவ சௌகரியமாயிருக்கும். இதனால் சாமான் உற்பத்தியாளர்களுட்கு இந்த டிபக்டிவ் சரக்குகள் குறைந்த விலைக்கும் நேரடியாகவும் கிடைத்து அவர்களுடைய கஷ்டங்கள் ஓரளவுக்குத் தணியும். அரசாங்கத்தார் இது விஷயத்தை கவனித்து உதவி செய்தால் நலமாயிருக்கும்.

இரும்பு எஃகு ஆலோசனைக் குழுவை உடனடியாக மாற்றி அமைக்க வேண்டும்.

உற்பத்தியாளர்களின் நலன்களை சரியானபடி பாதுகாக்கஇராஜ்யஇரும்பு எஃகு ஆலோசனைக் குழு (State Iron & Steel Advisory Board) வை உடனடியாக மாற்றி அமைக்கவேண்டும். உற்பத்தியாளர்களின் நலன்களைக் காற்றில்பறக்க விட்டு இத்தொழில் சம்பந்தமாக நிறுவப்படும் எந்தக் குழுவும் தொழிலின் முன்னேற்றத்துக்கு வழிகோலாது என்பதை வற்

புறுத்தித் தெரிவித்துக் கொள்கிறோம்.

சிறு கைத்தொழில்களைப்போலவே பேப்ரிகேட்டர்களுக்கும் அளிக்கப்படவேண்டும்.

சமீபகாலத்தில் "சிறு கைத்தொழில்கள்" என்கிற தொகுப்பில் அரசாங்கத்தார் சில உற்பத்தியாளர்களுக்கு அதிகப்படி சலுகை காட்டி வருகிறார்கள். அத்தியாவசியப் பொருள் உற்பத்தியாளர்களாகிய நாங்கள் நீண்டகாலமாகவே தொழில் செய்து வருகிறோம். ஆனாலும் இன்னும் வளர்ச்சியடையவில்லை. ஆகையால் அரசாங்கத்தார் எங்களுக்கும் வேண்டிய சலுகைகளைக் கொடுத்து எங்கள் தொழிலை அபிவிருத்தி செய்யுமாறு வேண்டுகின்றோம்.

நாங்கள் சர்க்கார் ஆதரவில் வாழ்பவர்கள், எந்த சமயத்திலும் சர்க்காருடன் ஒத்துழைக்கக் காத்திருக்கிறோம். ஆகவே, கனம் அமைச்சர் அவர்களும் அரசாங்க அதிகாரிகளும் எங்கள் மேற்படி குறைபாடுகளை நன்கு பரிசீலனை செய்து, இந்த இராஜ்யத்திலுள்ள உற்பத்தியாளர்கள் எல்லாவகையிலும் சௌகரியமடையும்படி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தருமாறு அடிஷனல் டைரக்டர் அவர்களையும் ஸ்டீல் ஆபீஸர் அவர்களையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

GANESH STORES

28-B, KHAN MARKET,

NEW DELHI.

Place for best, South Indian goods, such as Coffee (raw, roast & ground), provisions like Nellore rice and other commodities.

Our motto is best service and customers' satisfaction.

KRISHNAMOORTHY IYER,
Manager.

மேலை நாட்டின் தொழில் நுட்பம்: புல் தரையில் புல்லை ஒழுங்காக வெட்டும் கருவியைத் தொலைவில் இருந்துகொண்டு ரேடியோ அலைகளால் இயக்கும் சாதனம் ஒன்றை கலிபோர்னியா உயர்நிலைப் பள்ளி மாணவரும் (இடப்புறமுள்ளவர்) ஆசிரியரும் காட்சியில் வைத்துக் காட்டுகின்றனர்.

அறிமுகம்

("சிசு")

[இந்தப் பகுதியில் சிறு அல்லது குடிசைத்தொழில்களில் உற்பத்தி செய்யப்படும்பண்டங்கள் பற்றி நம் வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறோம். உற்பத்தியாளர்கள் கட்டணம் செலுத்தாமல் இந்த அறிமுக வாய்ப்பை பயன் படுத்திக்கொள்ளலாம். ஆனால் பண்டங்கள்மாதிரிக்கு அனுப்பப்படவேண்டுவது அவசியம். "ஆசிரியர், தொழில் (அறிமுகப்பகுதி), சென்னை," என்ற முகவரிக்கு மாதிரிகள் அனுப்பப்படுதல் வேண்டும்.]

*

கல்லிலும், செம்பு, வெண்கலம், வெள்ளி, பொன் போன்ற உலோகங்களிலும் உயிர் ததும்பும் கலைப் படைப்புகளைச் செய்வதில் தொன்று தொட்டு வல்லவர்கள் தமிழர்கள். தந்தம், மரம், கிலிஞ்சல் போன்றவற்றிலும் வேலைப்பாடமைந்த கலை அழகுப் பொருட்கள் தயாரிப்பதென்பது தமிழர்களுக்குப் புதிதல்ல.

பிரம்புகளினால் கலை அழகு மிகுந்த உபயோகப்பொருட்கள் தயாரிப்பதில் இருபதாண்டுகளுக்கு மேலாகப் புகழ் பெற்றிருப்பவர்கள் ராயப்பேட்டை, ஸ்ரீ ஜெயபாரதம் கம்பெனியார், வீட்டுக்கு அழகும், ஆர்வமும் அளிப்பவை. பிரம்பினால் செய்யப்படும் மேஜை, நாற்காலி, சோபா போன்றவற்றை கண்ணைக்கவரும் வண்ணங்களில், கருத்தைக்கவரும் தோற்றங்களில் செய்து முடிப்பதில் ஸ்ரீ ஜெயபாரதம் கம்பெனியார் தனிச் சிறப்பு பெற்றவர்கள். விலைகள் மலிவு; சாமான்களின் சிறப்பு உயர்வு.

இல்லங்களில் மட்டுமின்றி, பங்களாக்களிலும், அலுவலகங்களிலும், கோரிக்கை நிலையங்களிலும், சினிமா ஸ்டுடியோக்களிலும் ஸ்ரீ ஜெயபாரதம் கம்பெனியார் தயாரிக்கும் பிரம்புச் சாமான்கள் அலங்காரமாக அமைந்து விளங்குகின்றன.

சிறு தொழில் முறையில் நடைபெறும் பிரம்புத் தொழில் ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலையளித்து உணவூட்டி வருகிறது.

கலை அழகு படைத்த பிரம்புச் சாமான்கள் வாங்க நினைக்கும்போது, ஸ்ரீ ஜெயபாரதம் கம்பெனிக்கு விஜயம் செய்யத் தவறாதீர்கள்!

●

ஸ்ரீ ஜெயபாரதம் & கம்பெனி

182, ராயப்பேட்டை ஹைரோடு,

சென்னை - 14 : போன் : 85206,

தொழில்

மாத மிருமுறை

சந்தா விகிதம்

தனிப் பிரதி	0—4—0
ஆண்டு சந்தா	6—0—0
வெளி நாடு	8—0—0

அடுத்த இதழில்?

கைத்தறி நெசவாளர்களின் நிலையும், அடிப்படை கஷ்டங்கள் பற்றிய கட்டுரை வெளிவரும் என்பதை அறிவித்துக் கொள்ளுகிறோம்.

ஆசிரியர்

பண்டையத் தொழிலுக்கு கருணை காட்டுக!

[அரசன்]

சென்னை அரசினர் ஒருபுறம் குடிசைத் தொழில் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு வருவதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனால், அதே நேரத்தில் தங்களை அறியாமலே சில தொழில்கள் நசித்துப்போகும் அளவிற்கு இடையூறுகள் விளைவித்து வருவதை நாம் எடுத்தியம்பாமலும் இருக்க முடியாது.

கட்ட கந்தைக்கும் கதியற்ற மனைவியோடும், எலும்பும் தோலும் பறட்டை தலையுமாக காட்சியளிக்கும் தம் குழந்தைகளுடன், ஒருவேளை உணவிற்கும் வக்கற்று, குடும்பம் பூராவும் ஈடுபட்டு; வெகு தொலைவிலிருந்து பல இன்னல்களுக்கிடையே மண் எடுத்துவந்து அம் மண்ணைத் தாம் கொண்டுள்ள பாதி பலத்தையும் உதைப்பதிலும் பிசைவதிலும் செலவிட்டு; மட்கலங்களை வனைந்து; அவற்றை பக்குவமாக உலர்த்தி; பால் மணம் மாறா பச்சிளங் குழந்தைகளைத் தாய் காப்பதுபோல் காத்து; வானம் பொழிந்தால், தம்முடைய பன்னாள் உழைப்பும் ஒரே நாளிலே சிதைந்துவிடுமே என்று ஏங்கி ஏங்கி; நாள் பார்த்து; சூளையில் இட்டு சுடுகின்ற வேளையில் சர்க்கார் சட்டம் குறுக்கிட்டால், சிறு தொழில், புராதன குடிசை தொழில்-எங்கிருந்து வளரும் என்பதை நாம் சற்றேனும் சிந்திக்காமல் இருக்க முடியாது. சிந்திக்கும் வேளையில் தனித் தொழிலுக்கும் அத் தொழிலால் பெறும் ஊதியத்தைக் கொண்டு நடத்துகின்ற தன் வாழ்க்கைக்கும் இடையூறாக இருக்கும் சட்டத்தினின்றும் மண்பாண்டத் தொழிலாளரை விடுவிக்கும் வகைதான் என்னே? என்ற கேள்வி எழாமல் இருக்க முடியாது.

இத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற மக்கள் பண்டைய நாட்களிலேயே பிற சமூகத்தினருக்கு இன்னல் விளைவிக்காத வகையில் தனித்து வாழ்ந்து வந்தார்கள். இன்றுங்கூட முற்போக்கடையாத சில கிராமங்களில் சென்று காண்போமாயின், இவர்கள் அக்கிராமத்தின் ஒரு கோடியிலோ அல்லது ஒதுக்குப்புறத்திலோ வாழ்ந்து வருவதைக் காணலாம். காலக்கிரமத்தில் கிராமங்கள் முற்போக்கடைய இவர்கள் அக்கிராமத்திற்கு மத்தியிலே தங்கள் தொழிலைச் செய்ய வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டு விட்டது. இத் தொழிலால் பிற மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுகிறது என்றால் அஃது யார் குற்றம்? பிற மக்கள் இவர்களைச் சூழ்ந்து வாழ முற்பட்டது குற்றமா? அல்லது புராதனமாகச் செய்து வரும் தங்கள் தொழிலை பிற மக்களுக்கு இடையில் செய்வது குற்றமா? எது குற்றம்? வளர்ந்து வருகின்ற முன்னேற்றத்திற்கு ஒத்தவகையில் மண்பாண்டம் செய்பவர்களுக்கென ஒரு தனி காலனி அமைத்துத்தர வழி வகைகளை அரசினர் செய்யாதவரையில் இத் தொழிலாளர் தங்கள் தொழிலை எங்கு நடத்துவது? தொழிலுக்கு பாதுகாப்பு தான் என்ன? சட்டத்தைக்கொண்டு தடை செய்து சூளை போடுதல் பொது சுகாதாரத்திற்கு ஏற்றதல்ல என்றால், இத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற ஆயிரக்கணக்கான மக்களின் கதிதான் என்ன? இத்தொழிலுக்கு லைசென்ஸ் வழங்க மறுப்பதும், சூளை போடுவதைத் தடுப்பதும், ஒரு பிரஜை யோக்கியமாக அல்லது நாணயமாகத் தொழில் நடத்துவதை தடை செய்வதாகாதா? இது இந்திய அரசியல் சட்டத்திற்கு முரணானதாகாதா? ஒரு பிரஜைக்கு அரசியல் சட்டத்தின் மூலம் அளிக்கபட்டிருக்கும் ஜீவாதார உரிமையை இஃது மறுப்பதாகாதா?

இதுபற்றி, இத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற மக்கள் பல மாநாடுகளைக் கூட்டித் தீர்மானங்கள் நிறைவேற்றி, தங்கள் குறைகளை அரசினருக்கு எடுத்துக்காட்டியிருந்துங்கூட சென்னை அரசினர் இது குறித்து வாளாயிருக்கின்றனர். எனவே, சென்னை சர்க்கார் இம் மக்கள் பால் கருணை காட்டி தனிக் காலனிகள் அமைத்துத்தர வழி செய்ய வேண்டும். அதுவரை, இத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற மக்களுக்குத் தாங்கள் வசிக்கின்ற இடங்களில் மட்கலங்களை சுடுதற்கு லைசென்ஸ் வழங்கவேண்டும் இதற்கான உத்தரவை உடனடியாக ஆங்காங்குள்ள நகராட்சி மன்றங்களுக்கும் மாவட்ட அதிகாரிகட்கும் சென்னை அரசாங்கம் அனுப்பி வைத்தால் உண்மையிலேயே குடிசைத் தொழிலை வளர்க்க இவ்வாட்சி பாடுபட்டு வருகிறது என்பதை எவரும் தெள்ளத் தெளிய உணர்ந்து கொள்ள முடியும்.

காத்தருள்வாய்

(வரகூர், சங்கீதபூஷணம், க. முத்துக்குமாரசாமி)

இராகம்: **நாட்டை** — தாளம்: **ஆதி**

பல்லவி

காத்தருள்வாய் கணபதியே-இன்பக்
கவின்தரும் குணநிதியே (காத்)

அநுபல்லவி

ஏத்துநல் லன்பர்க் (கு) இதம்செயும் கோவே
இழிவினை நீக்கும் எழிலுறு தேவே (காத்)

சரணம்

வசந்தமும் தென்றலும் வந்தது போன்ற
வாழ்வில் நலன் ஆயும் வகையது தோன்ற
பசுந்தமிழ்த் தேனதின் பலனில் உவந்து
பலகவி சொல்லும் நலமது தந்து (காத்)

விளம்பர விகிதம்

ராப்பர் 4-வது பக்கம்	(இரண்டு கலர்)	100—0—0
,, ,,	(ஒரு கலர்)	75—0—0
ராப்பர் உள் பக்கம்		75—0—0
சாதாரண முழு பக்கம்		60—0—0
,, ½ பக்கம்		30—0—0
,, ¼ பக்கம்		20—0—0

காண்டிராக்ட் விளம்பரங்களுக்கு,

அட்வர்டைஸ்மென்ட் மானேஜர்,

"தொழில்"

55, எடப்பாளையம் தெரு, சென்னை-3.

சென்னை ராஜ்ய சிறுதொழில்

வர்த்தகர் சம்மேளனம்

[எஸ். சூரியநாராயணன்]

சென்னை இராஜ்ய சிறுதொழில் வர்த்தக சம்மேளனம் மதுரை.

"திரை கடலோடியும் திரவியம் தேடு" என்ற முதுமொழிக் கிணங்க, கடல் கடந்து வாணிபம் செய்தும், பல்லாயிரம் ஆண்டுகளாகத் தொழில் வளர்த்தும் செழித்து வளர்ந்து வந்த வர்த்தக சமுதாயம், சிறுகச் சிறுக நலிந்து வருகிறது. சிறப்புடன் வாழ்ந்து வந்த வர்த்தக சமூகம் சீரழிய ஆரம்பிக்கத் தொடங்கியது. அதிலும் குறிப்பாக, சிறிய முதலீடு வைத்து,உடலுழைப்பையும் விடாமுயற்சியையும் துணையாகக் கொண்டு, வெற்றிப்பாதை நோக்கிச் சென்று கொண்டிருந்த சிறிய வர்த்தகர்கள் விற்பனை வரியினால் கஷ்டப்பட்டு வந்தனர். வரி செலுத்தும் கஷ்டம், அதிகாரிகளிடமும், வரி இலாகா ஆபீசுக்கும் சென்று கணக்குக் காண்பிக்கும் கஷ்டம்,வாழ்க்கையை நடத்துவதிலுள்ள சிரமம் ஆகிய அத்தனையையும் சமாளித்து முன்னேற முடியாத நிலையிலிருந்து நிவாரணம் பெற கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக விடாமுயற்சி செய்யப்பட்டு வந்தது. சிறிய வர்த்தகர்களின் உழைப்பையும், அவர்களது ஆதரவையும் ஏணிப்படியாக உபயோகித்து, பலர் பயனடைந்த கடந்த கால நிகழ்ச்சிகள் கண்ட பலனே தவிர, சிறு வியாபாரிகளின் குறைகள் தீர்ந்தபாடில்லை. குறைகள் தீருவதற்குப் பதிலாக கஷ்டங்கள் அதிகரிக்கத் தொடங்கியது. இந்த சூழ்நிலையில் தான் சிறிய வர்த்தகர்கள், சிறிய குடிசைத் தொழில் உற்பத்தியாளர்கள், உணவுப் பொருள், அழுகல் பொருள் வர்த்தகர்கள் ஆகியோரின் நலனைப் பாதுகாக்க ஸ்தாபனமொன்றை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

அதன்பேரில் கடந்த 23-3-58ம் தேதி யன்று கும்பகோணத்தில் வைத்து உருவாக்கப்பட்டது "சென்னை ராஜ்ய சிறுதொழில், வர்த்தகர் சம்மேளனம்". இதை ஸ்தாபித்த பெருமை குடந்தை நகர் வர்த்தகர் சங்கத்தையும் அதன் நிர்வாகிகளையுமே சாரும்.

1. சிறிய முதலீடு கொண்டு வருஷம் ஒன்றுக்கு ரூ. 50,000வரை வியாபாரம் செய்பவர்களுக்கு விற்பனை வரி விதிக்கக்கூடாது. வருஷம் ஒன்றுக்கு ரூபாய் ஐம்பதினாயிரத்துக்குமேற்பட்ட வியாபாரத்திற்கு வரி விதிக்க வேண்டும்.

2. சிறிய குடிசைத் தொழில், மூலப் பொருள் உற்பத்தியாளர்களுக்கு வரி விலக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும்.

3. உணவுப் பொருளுக்கும், அழுகல் பொருள்களுக்கும் விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டும்.

மேற்கண்ட லட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு பாடுபடுவதுதான் சம்மேளன லட்சியமாகும். இந்த லட்சியப்பாதையை நோக்கி முன்னேற, கடந்த 11-4-58-ல் விசேஷ மகா நாடு சென்னையில் நடை பெற்றது. (மகா நாட்டின் நடவடிக்கைகளை முதல் பிரதியில் காணலாம்) ஆகவே சம்மேளனம் சிறப்புடன் செயல் படவும், லட்சியக் கனவு நனவாகவும் சிறிய வர்த்தகர்களும், சிறு குடிசைத் தொழில், மூலப் பொருள் உற்பத்தியாளர்களும், உணவு - அழுகல் பொருள் வர்த்தகர்களும், ஐக்கியப்பட்டு பாடுபடமுன்வரவேண்டும். இந்தப் பணியை நிறைவேற்றுவதென "சம்மேளனம" சங்கற்பம் செய்துள்ளது. உங்கள் ஆதரவும், ஒத்துழைப்புமே அதற்கு ஊன்று கோலாகும்.

உயர்ந்த ரகம்

உறுதியானவை

"திண்டுக்கல்"

ஸ்டீல் டிரங், சூட்கேஸ், கேபின் ரகங்கள், வாளிகள், விவசாயக் கருவிகள், கீல் சட்டங்கள், இரும்பு கிராதிகள், நெல் அவியல் டாங்குகள், தண்ணீர் டாங்குகள், தங்களின் ஆர்டரின் பேரில், சுத்தமாக தயாரித்து கொடுக்கிறோம்.

M. கருப்பனன்.

★

சென்னை அரசினர் உதவி பெற்ற

லக்ஷ்மி டிரங்க் டிப்போ

99, மெயின் ரோடு,

திண்டுக்கல்.

திண்டுக்கல் தாலுகா வடமதுரை பிர்க்கா தேசிய மண்பாண்டத் தொழிலாளர்கள் முதலாவது மகாநாட்டுத் தீர்மானங்கள்

—*—

சென்னை இராஜ்ய குலாலர்கள் சங்கத் தலைவர்

A. S. S. காசிராஜ் தலைமையில்

நிறைவேறியது

வடமதுரை பிர்க்காவில் தயாரிக்கப்படும் மண்பாண்டங்களை விற்பனை செய்யஒரு கூட்டுறவு விற்பனைச் சங்கம் அமைக்க, தக்க ஏற்பாடு செய்யவேணுமாய் சர்க்காரை கேட்டுக்கொள்கிறது.

குலால சமூகத்தினர் குழைந்தகளுக்கு, பின்தங்கிய வகுப்பினர்களுக்களித்த சலுகையைப்போல் பத்தாவதுவரை இலவசக் கல்விக்கு சலுகையளித்த சென்னை சர்க்காருக்கு இம்மகாநாடு நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறது.

மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு குடிசைத் தொழிலின் கீழ் கொடுக்கப்படும் கடன்களை உடனடியாகக்கிடைக்க வகைசெய்ய சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

வீடு இல்லாத மண்பாண்டத் தொழிலாளர்களுக்குகுடியிருப்பு வசதிக்காக வீடுகள் கட்டிக்கொள்ள இடம் ஜாரி செய்து கொடுக்கவேணுமாய் சர்க்காரைக் கேட்டுகொள்கிறது.

மண்பாண்ட சூளைவைக்க இருக்கும் லைசென்ஸை ரத்து செய்யவும், சர்க்கார் புறம்போக்கு நிலங்களை சூளைக்காக ஜாரிசெய்து கொடுக்க வேணுமாயும் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

சந்தையில் மண்பாண்டங்களை விற்பனை செய்வதற்கு வரி வசூல்செய்வதை ரத்து செய்யவேணுமாய் சர்க்காரை கேட்டுக்கொள்கிறது.

வீடு இல்லாத மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தில் சேர்த்து, பாதித்துகை கடனாகவும், பாதித்துகை இலவசமாகவும் கொடுத்து வீடுகள் கட்டிக் கொடுக்க மத்திய சர்க்காரையும் இம்மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

மண்பாண்டம் செய்வதற்கும் மண் எடுப்பதற்கும் சர்க்கார் குளம், புறம்போக்கு இடம் (படுகை) முதலிய இடங்களில் தடங்கலில்லாமல் மண் எடுத்துக்கொள்வதற்கு சர்க்காரை இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

வடமதுரை. வீ. ஆண்டிவேளார்
தலைவர்.



சென்னை ராஜ்ய சிறு தொழில் வர்த்தகர் சம்மேளனத்தின் 1958-59-வது வருஷத்தின் நிர்வாகஸ்தர்கள். தலைவர்: ஸ்ரீ கே. பெருமாள் உடையார் மற்றவர்களையும் காண்க,

மீன் பிடிக்கும் தொழிலுக்கு சர்க்கார் பாதுகாப்பு

நாடு அடிப்படையில் உள்ள தொழிலில் மீன் பிடிக்கும் தொழிலும் ஒரு முக்கியமான தொழிலாகும்.

மீன் பிடிக்கும் தொழிலாளிகள் தினந்தோறும் இரவு 3 மணிக்கு வலையையும் பரியையும் எடுத்துக் கொண்டு ஆற்றில் கட்டு மரத்துடன் சென்று விட்டால் காலை 8 மணிக்கு வீடு திரும்புவார்கள். சுமார் 6 மணி நேரம் தண்ணீரில் கஷ்டப்பட்டு மீன் பிடித்தால் அதில் வரும் வருமானம் மிகவும் குறைவு.

சராசரி ரூ. 1—0—0 வீதம் தான் கிடைக்கும் அவர்களுக்கு இந்த வருவானத்தில் குடும்பத்தை நடத்துவது மிகவும் கடினம்.

ஆனால் மீன் பிடிக்கும் தொழிலில் வருமானம் அதிகம் கிடைக்கும் என்று மற்றவர்கள் நினைக்கின்றார்கள். அது மிகவும் தவறு.

மீனவ மக்கள் ஆற்றுக்குப் போகும் நேரத்தில் யார் எழுந்து போகின்றார்களோ அவர்களே கிராமத்தில் உள்ள மீன் பிடிப்போர்கள் அனைவரையும் எழுப்பிக்கொண்டே போவார்கள் முதலில்கொடுத்தவர் குரலை கேட்டவர்கள் எழுந்து குரல் கொடுத்து கொண்டே கிராமத்தின் தெருகோடியில் வந்து எல்லோரும் ஒன்று சேர்ந்து போகும்போது அவரவர்கள் வலைகளையும், பரியையும் தோளில் போட்டுக்கொண்டு அத்துடன் ஒரு மரக்கோலையும் எடுத்துகொண்டு ஒவ்வொருவராக போகும் பொழுது பார்த்தால் அவர்களின் ஒற்றுமையைத் தான் நினைக்க நேரிடுகிறது. உதாரணமாக சென்னை அடையார் ஆற்றில் மீன் பிடிக்கும்போது கட்டு மரத்தின்மேல் நேருக்கு நேராக நின்று வலை வீசும் காட்சியை அனைவரும் பார்த்துமகிழ்ச்சி அடைவார்கள்.

நமது சர்க்காரில் மீனவர்களின் நலனுக்காக மீன் இலாகா ஏற்படுத்தி மீனவ மக்களுக்கு வசதிகள் செய்து வருவதை நாம் பாராட்டகடமைப் பட்டுள்ளோம்.

மேலும் மீன் பிடிக்கக்கூடிய கருவிகளும், கூட்டுறவு சங்கங்களும் மீனவ சங்கத்தின் மூலமாய் மாத தவணை முறையில் ரூபாய் கொடுத்து வருகிறது.மீன் பிடிக்கும் தொழில் எல்லா நாட்டிலும் மிகவும் சிறந்த தொழில் என்றுதான்

(மூன்றாம் பக்கம் பார்க்க)

குமரகுரு டின் ஒர்க்ஸ்

தங்களின் ஆர்டரின் பேரில் "டபுள் பாலிஷ்" டின் பிளேட்டில் எல்லாவித சைஸ் டின்களும், கலாய் தகட்டில் எல்லாவித பொருள்களும் சுத்தமாக செய்து தருகிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தங்கள் அன்புள்ள,

S. வீரபத்திரன்

S. M. முனிரத்தினம்.

உரிமையாளர்கள்.

5-C, கணக்கப் பிள்ளை தெருவு,

தண்டையார்பேட்டை,

சென்னை-21

சிறுகதை

எல்லாம் நடிப்பு!

சோ. கருணாநிதி

மாமாவும் அத்தையும் கோவிலுக்குப் போய்விட்டனர். நான் என் அறையில் உட்கார்ந்துகொண்டு திருவாசகத்தை மனத்திற்குள் பதித்துக் கொண்டிருந்தேன். அப்போது திடீரென்று அறைக்கதவு திறக்கப்படும் சப்தம் கேட்டுத் திரும்பினேன், நிர்மலா நின்று கொண்டிருந்தாள்.

"வா நிர்மலா!...உட்கார்!" என்றேன்.

"அத்தான்...!" அவள் குரலில் ஏக்கம் தொனித்தது.

"என்ன நிர்மலா...?"

"இந்தத் திருமணத்தை நீங்கள் விரும்புகிறீர்களா அத்தான்?" நான் என்ன பதிலைச் சொல்வது? ஒன்றுமே பேசாது மௌனம் சாதித்தேன்.

என்ன அத்தான்! நான் கேட்கிறேன்; நீங்கள் பேசாமல் இருக்கிறீர்களே?...அப்படியானல் என்னைக் கல்யாணம் செய்துகொள்ளத் தீர்மானித்து விட்டீர்களா...? அழமாட்டாத குறையாய் அவள் கேட்டபோது என்னால் ஒன்றுமே சொல்லாமல் இருக்க முடியவில்லை.

"நீ எந்த அளவுக்கு இந்தக் கல்யாணத்தை விரும்பவில்லையோ அதேபோல்தான் நானும் நிர்மலா...!"

"பின்பு ஏன் அப்பா சம்மதம் கேட்டபோது பேசாமல் ஊமையாய் இருந்தீர்கள்!"

"பேசாமல் இருந்தால் சம்மதம் என்று பொருளா?"

"அப்பாவும் அம்மாவும் அப்படித்தான் எண்ணி விட்டனர்?"

"அதனால் நீ ஒன்றும் வேதனைப்படவேண்டாம்; எப்படியும் விமலனையே உனக்கு முடித்துவிடுகிறேன்...! நான் இப்படிச் சொன்னதும் வேதனை படர்ந்திருந்த அவள் முகத்தில் வெட்கம் குமிழியிட்டது.

"குறும்பைப் பார் குரும்பை!" என்று செல்லமாகச் சொல்லிவிட்டு வெள்ளம் போல் ஓடிவந்த வெட்கத்தைத் தாளமுடியாமல் உள்ளே போய் விட்டாள். என்னால் அவள் குழந்தை உள்ளத்தை கண்டு சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

இரவுச்சாப்பாட்டை முடித்துக்கொண்டு படுக்கப் போனபோது, நிர்மலா ஆல்விடோன் குவளையுடன் வந்து, "அத்தான் இதோ ஆல்விடோன் இருக்கிறது!" என்று சொல்லிவிட்டுமெல்லிய புன்னகை ஒன்றைஎன்மேல் சிந்திச்சென்றுவிட்டாள், அவள் சிந்திச்சென்ற அந்தச்சிரிப்பிலேசகோதர பாசந்தான் பிரதிபலித்ததே தவிர வேறு எதையுமே என்னால் காண முடியவில்லை. நிர்மலா எனக்கு முறைப்பெண்தான். ஆனல் அவள் என்னிடம் பழகிய விதமோ தங்கை ஒருத்தி தன் அண்ணனிடம் பழகியது போல் தான். பிரிக்க முடியாத சகோதர பாசம் எங்கள் இருவர் உள்ளத்திலும் எப்படியோ வளர்ந்து விட்டது. ஆச்சரியப் படத் தக்க ஒன்று தான்; ஆனல் உண்மை. மாமாவும் அத்தையும் இதை அறிவார்களா என்ன? அவர்களுடையஎண்ணம் எல்லாம் எப்படியோ எங்கள் இருவரையும் ஒரு முழக் கயிறு மூலம் கணவன், மனைவி ஆக்கிவிட வேண்டும் என்ற ஒன்றேதான்.

ஒருநாள் மாமா என்னிடம் சம்மதம் கேட்டபோது 'எல்லாம் படிப்பு முடியட்டும் மாமா?' என்று சொல்லிவிட்டேன். ஆனல் எத்தனை நாட்களுக்குத்தான் படிப்பின்மேல் சாக்கு வைத்து தப்ப முடியும்.

மாமாவின் பிடிவாத குணத்துக்காக, நிர்மலாவை நான் மணந்துகொண்டால் விமலன் என்னைப்பற்றி என்ன எண்ணுவான்? உயிருக்குயிராகப் பழகிவிட்டஅவனுக்கு நான் துரோகம் செய்யலாமா? நிர்மலாவும் விமலனும் காதலர்களாவதற்கு, நானே காரணமாக இருந்துவிட்டு இப்பொழுது நானே அவர்களைப்பிரித்து அந்தப் பிரிவுத் துயரிலே நான், இன்பச் சுடரை ஏற்ற நினைக்கலாமா?

அந்தச்சம்பவத்தை நினைத்தாலே சிரிப்புத்தான்

வருகிறது; ஒருநாள், நானும் விமலனும் கல்லூரியில் இருந்து நிர்மலாவின் கல்லூரிக்குவந்து அவளையும் உடன் கூட்டிக்கொண்டு கடற்கரையில் உள்ளகாண்டினுக்குச் சென்ருேம் காப்பி குடிக்க! போகின்ற வழியில், சுமார் பத்து முறையாவது 'அத்தான்! அத்தான்! என்று என்னை அழைத்து எதை எதையோ பற்றிக் கேட்ட போது விமலன் சிரித்தான்.

''என்னடா சிரிக்கிருய்?'' என்றேன் காரணம் அறியாமல் வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டே.

''என்னடா! சங்கர்! என்ன இப்போதிருந்தே அஸ்திவாரம் போட ஆரம்பித்து விட்டாயா?'' என்ருன் கிண்டலாக!

எனக்கு மட்டுமல்ல நிர்மலாவுக்கும் அவனுடைய கேலிச் சொற்கள் நன்ருக விளங்கிவிட்டன.

''அந்த உரிமையை நிர்மலா உனக்கல்லவா கொடுத்து விட்டாள்'' என்றேன் நான. நிர்மலாவுக்கு எதிரிலேயே நான் இதைச்சொல்லி விட்டதால் அவள் உடம்பு ஜில் லென்று வியர்க்க ஆரம்பித்தது. நிர்மலா தலையைக் குனிந்து கொண்டு மெல்ல தன் கடைக்கண்ணுல் விமலனை நோக்கிச் சிரித்ததை நான் பார்த்திருக்க மாட்டேன் என்ற நினைப்பு நிர்மலாவுக்கு மட்டுமல்ல விமலனுக்கும் கூடத்தான் இருந்தது.

இந்தச் சம்பவத்திற்கு பிறகு எத்தனையோ நாட்கள் ஓடி மறைந்து விட்டன. நிர்மலாவும் விமலனும் ஒருவரை ஒருவர் உயிருக் குயிராகச் காதலித்தனர். வேண்டாம் இதெல்லாம் எனக்குத் தெரியாதுஎன்ற எண்ணம் அவர்களுக்கு! இதை அவர்களும்என்னிடம் சொல்லவும் இல்லை. என்? இரண்டு உள்ளங்களும் ஒன்றை ஒன்று நேசிப்பதைப் பிறர் அறியக் கூடாது என்பது தான் அதன் காரணமோ? யாருக்குத் தெரியும்?

நிர்மலாவிடமே இதைப் பற்றிக் கேட்டபோது அவள் மறைக்காமல் 'ஆம் அத்தான்' என்று கூறிவிட்டு தலையைக் குனிந்து கொண்டாள். இருவர் உள்ளங்களும் ஒன்ருேடு ஒன்று பிணைக்கப் பட்டுவிட்டது. வாழ்விலும் தாழ்விலும் அந்த இரண்டு இதயங்களும் இணைந்து நடக்கத் தீர்மானித்து விட்டன. இணைக்கப்பட்ட அந்த இரு இதயங்களையும் பிரிக்க முயன்ருர் மாமா, நிர்மலாவை எனக்கு கல்யரணம் செய்து வைப்பதின் மூலம்.

மாமாவுக்கு ஒரே மகள் நிர்மலா; அவளை எனக்குக் கொடுப்பதின் மூலம் என்னை வீட்டோடு மாப்பிள்ளையாக வைத்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் அவருக்கு. ஆனல் எங்களிடையே வளர்ந்த சகோதரபாசம் அவர் ஆசை வெள்ளத்திற்கு அணைபோட்டுத் தடுத்தது. இந்நிலையில் நான் எப்படி அவளை மணந்து கொள்ள முடியும்? அப்படித்தான் நாங்கள் இருவரும் தம்பதிகளாகவே மாறிவிட்டாலும் வாழத்தான் முடியுமா? முடியாது! இருவரும் எதையோ ஒன்றை நினைத்து ஏங்கித் தவிக்க வேண்டிய நிலைமை தான் ஏற்படும்!

மாமாவிடமே நிர்மலா, விமலன் காதலை எடுத்துக் கூறி ஒரு முடிவுக்கு வரலாம் என்று நினைத்து அவ்ரிடம் சென்று விபரமாக எல்லாவற்றையும் எடுத்துக் கூறினேன். மாமா சினம் கலந்த சிரிப்பை என்மேல் தாக்கி விட்டு, ''இதோபார் சங்கர்! இந்தமாதிரி காதல் கீதல்னு கத்தறதிலே ஒன்றும் பிரயோசனம் இல்லை; எனக்கு நல்லாத் தெரியும் காதல் கல்யாணம் செய்தவங்க உருப்படியே ஆனதில்லையென்று...) அதுபோகட்டும்! இந்தக் கழுதை தான் எப்படி அவனைக் காதலிக்கலாம்; செய்ததுதான் செய்தாளே! இதை யாரிடமாவது சொல்லிவிட்டு செய்தாளா? அதுவும் தவிர அவன் குலோத்திரம் என்னவோ? இதெல்லாம் எதுக்கப்பா நமக்கு......!''

''காதலுக்குத்தான் கண்ணில்லைன்னு பெரியவங்க சொல்லி இருக்காங்களே மாமா! அப்படி இருக்கும் போது......,'

''என்ன அப்படிஇருக்கும் போது? இதோபாரு சங்கர்! என் பிடிவாத குணம் உனக்கு நல்லாத் தெரியும்! பிரும்மாவேவந்தாலும் என் முடிவு முடிந்ததுதான்! எப்படியும் நீ தான் அவளை மணந்து கொள்ள வேண்டும்...!'' கட்டளையை பிறப்பித்து விட்டு போய் விட்டார் மாமா! நான் செய்வதறியாதுதிகைத்தேன். இதை மனத்தில் வைத்துக்கொண்டுதான் நிர்மலா நான் அவளைக் கல்யாணம் செய்து கொள்ள சம்மதித்து விட்டதாக எண்ணிக் கொண்டது! எண்ண அலைகள் ஓய ஆரம்பித்தன! கடிகாரத்தைப் பார்த்தேன்! மணி பனிரெண்டு.

நிர்மலா விமலன் திருமணத்தை எப்படி முடிப்பது? இந்தக் கேள்விக்கு றிக்கு

விடைக்ண்டு பிடித்துவிட்டால் பிறகு தொல்லேயே இல்லே, நீண்ட நேரமுடிவுக்குப் பிறகு சரி எப்படியாகிலும் முடித்து விடுவதுஎன்ற எண்ணத்தோடு மனத் திருப்தி அடைந்தேன்.

ஒருமாதம் ஆகியிருக்கும். நிர்மலா திடிரென்று மயக்கம் போட்டு விழுந்து விட்டாள். ஒருநாள் மாமாவும் அத்தையும் பதைபதைக்க ஓடிவந்தனர், தண்ணீர் தெளித்த பிறகு சற்று குணமாகிவிட்டாள். பிறகு இரண்டுநாட்கள் கழித்து அத்தை மாமாவிடம் வந்து புகார் காண்டம் பாட ஆரம்பித்துவிட்டாள். ''என்னங்க! நிர்மலா இப்போது எதுசாப்பிட்டாலும் குமட்டல் எடுக்குது என்கிருள். புளிப்பான உணவு தான் வேண்டும் என்கிருள். டாக்டர் யாரையர்வது கூட்டி வந்து பார்த்தால் தேவலே!'' என்கிருள்.

மாமாவின் நெற்றி சுருங்கி விரிந்தது! சந்தேகக்குறி அதிலே வளேந்தோடியதை நான் கவனிக்கத் தவறவில்லே.

நான்தான் டாக்டர் ஒருத்தியை கூட்டிவந்து பார்க்கும்படி செய்தேன். அந்த அம்மாள் வந்து பரிசோதனே செய்து பார்த்துவிட்டு மாமாவை நோக்கி ''நீங்க கூடிய சீக்கிரம் தாத்தாவாகப் போறீங்க சார்!'' என்ருள்.

மாமா துள்ளிக் குதித்தார். அத்தை ஒப்பாரி வைக்க ஆரம்பித்துவிட்டாள்.

''களங்கமே கண்டறியாத பரம்பரையில் இந்தக் கோட்டான் பிறந்திருக்கிறதே! நான் எப்படியப்பா வெளியில் தலே காட்டமுடியும்!'' என்ருர் கன்னத்தில் கையை வைத்கொண்டே.

''ஏதோ நடந்தது நடந்து விட்டது, இனி வருத்தப் பட்டுப் பயனில்லே, பேசாமல் அந்தப்பயலுக்கே, நிர்மலாவை முடித்து விடுவது தான் நல்லது என்றேன் பயந்த குரலோடு.

''அவனுக்கா! அந்தத்திருட்டு ராஸ்கலுக்கா!'' என்ருர். ஆவேசத்தோடு.

''வேறுவழியில்லே மாமா! நம்ப குடும்பகௌரவம் குறையாமல் இருக்க வேண்டுமானல் இந்த மட்டோடு 'கப் சுப்' என்று காரியத்தை நடத்தினல் தான் உண்டு. இல்லேயேல் விஷயம் விபரீதமாய் போய்விடும்,'' என்று ஆறுதல் கூறினேன்.

நீண்ட நேரத்திற்குப்பிறகு ''அந்தச் சனியன் பிடித்தவன் ஒத்துக் கொள்வானு?'' என்று கேட்டார்.

''அதெல்லாம் நான் சரி செய்து கொள்கிறேன். நீங்கள் கல்யாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளேச் செய்யுங்கள்,'' என்று கூறிவிட்டு வந்து விட்டேன்.

குறிப்பிட்ட நாளில் நிர்மலாவுக்கும் விமலனுக்கும் கல்யாணம் வெகு சிறப்பாக நடந்து முடிந்தது. அவர்கள் இருவரையும் மணமக்களாகப் பார்த்தபோது என் மனம் மகிழ்ச்சியால் விம்மியது. பெரிய காரியத்தைச் செய்து விட்டதாக நினேத்துப் பெருமிதம் அடைந்தேன்.

திருமணம் முடிந்து இரண்டு மூன்று நாட்கள் கழித்து மாமாவிடம் சென்றேன் மாமா வேதனேயோடு காட்சி அளித்துக் கொண்டிருந்தார்.

''மாமா! என்னே மன்னித்து விடுங்கள் மாமா!'' என்ற வாறே அவர் கால்களேப் பிடித்து வேண்டினேன்.

என்னப்பா இது! நானல்ல உன்னிடம் மன்னிப்புக்கேட்க வேண்டும், பெருந்தன்மையான உனக்கு அந்தக் கோட்டானேக் கல்யாணம் செய்து வைக்க எண்ணியதை நினேத்து!'' என்ருர் அவர்.

இல்லே மாமா! நிர்மலா களங்கமற்றவள். உண்மையில் அவள் உத்தமி. நிர்மலாவை விமலனுக்குக் கல்யாணம் செய்து பார்க்க வேண்டும் என்ற ஆசையால் தான் நிர்மலாவை அப்படி நடிக்கச் செய்தேன். வந்து பார்த்த டாக்டரம்மாளும்கூட எங்கள் டாக்டர் வேலேக்குப் படிக்கும் ஒரு மாணவிதான். அவளும் பொய்தான்சொன்னுள் உங்களிடம், ஆனல் நிர்மலா மாசுபடா மாணிக்கம் மாமா! அவள் பத்தரை மாற்றுப் பசும் பொன்!......'' என்று நான் சொன்ன போது மாமா ஆச்சரியத்தால் மூச்சுவிடக் கூடமறந்து விடுவார் போல் தோன்றியது. அந்த நேரத்தில் நிர்மலா வந்து என்னே வணங்கினுள். நான் மணமாற அவளே வாழ்த்திய போது மாமா என்னே நோக்கி புன்முறுவல் பூத்தார். அவரால் வேறு என்னதான் செய்ய முடியும் அந்த சமயத்தில்?

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லவேண்டும். மீன் பிடிக்கும் தொழில் மூலம் சர்க்காருக்கு போதிய வருவாய் வருகின்றது. மீன் பிடிக்கும் தொழிலாளர்கள் சில இடங்களில் வீடு வசதி இல்லாமல் கஷ்டப்படுகின்ருர்கள் ஆகவே, சர்க்கார் உடனடியாக மீனவ மக்களேப் பாது காக்கும்படி வேண்டுகிறேும்.

தொடர் கதை

புதுமைக் கருத்துக்கள் கொண்ட சிறந்த தொடர் கதை ஒன்றை விரைவில் ''தொழில்'' தமிழ் மக்களுக்கு வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

புதிய தொடர் கதையை வாசகர்களுக்கு வழங்கப் போகும் பேனு மன்னரைப் பற்றிச் சில வார்த்தைகள்.

மீண்ட தமிழ் நிலத்தில் - திருத்தணியில் — பிறந்தவர் புலவர் நா. தேவநாதன். வலிமையும், கவர்ச்சியும் மிக்கவை அவரது எழுத்துக்கள். ''ஆலந்த விடன்'' இதழில் வெளியான ''ஒளி விளக்கு'' என்ற தம் சிறு கதையின் மூலம் தமிழ் நாட்டவருக்கு அறிமுகமானவர் புலவர் தேவநாதன். ''மனக்குரங்கு'', ''மாணவருக்கு நாடகங்கள்'' என்ற நூல்கள் வெளியிட்டுள்ளார். அடுத்துப் பல நூல்கள் வெளிவர இருக்கின்றன.

தேச பக்தரும், தமிழ் அறிஞருமான வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களிடம் திருக்குறள் கற்றறிந்த பெரியார் மங்கலங்கிழார் அவர்களின் மாணவர், புலவர் தேவநாதன். தமிழகத்தின் வட எல்லைகளை மீட்கப் போராடி, தம் கனவு நனவான பின்பு அண்மையில் மறைந்த பெரியார் மங்கலங் கிழார் அவர்கள் என்பது நாடறிந்த நல் வரலாறு. மறைந்த தம் ஆசிரியருக்கு நற்புகழ் ஈட்டிக்கொடுக்க வல்லவர் இளம் புலவர். அவரது இலக்கியப் படைப்பைத் தொடர்ச்சியாக் தமிழ் கூறும் நல்லுலகுக்கு வழங்க முன் வருகிறது ''தொழில்.''

அடுத்த இதழில் புதிய தொடர் கதையைப் பற்றி வாசகர்களுக்கு விவரங்கள் தருவோம். ஜூன் மாதத்தில் தொடர் கதை வெளிவரும்.—ஆ-ர்.

அடுத்த இதழில்?

சென்னை சர்க்காருக்கு ஒதுக்கி வரும் இரும்பு எஃகு அளாட்மெண்டில் மத்திய சர்க்காரின் நடவடிக்கைகள் பற்றி அடுத்த இதழில் வெளிவரும்.

ஆசிரியர்.

800
144847

MANIYAM INDUSTRIAL & ENGINEERING WORKS,
Government Approved Fabricator & Contractor,
(Regd. No. S. 5.)

A. C. C. CEMENT STOCKIST

32, Sankari Road, Trinchengode, (Salem Dt.)

(சென்னை அரசினர் உதவி பெற்றது)

உயர்ந்த ரகம், உறுதி வாய்ந்த சகல இரும்பு பெட்டிகள், கேஷ் பாக்ஸ், வாளிகள், பனைவெல்ல கொப்பரைகள், குடம், தண்ணீர் டாங்குகள் முதலிய பொருள்களும், விவசாயக்கருவிகளும், கட்டிட சாமான்களும், சகல விதமான லேத்து வேலைகளும், வெல்டிங்கும் செய்து கொடுக்கப்படும்.

T. M. சுப்ரமணிய ஆச்சாரி.

கொடிக்கால் தொழில்

எஸ். சூரியநாராயணன்

(பொதுக் காரியதரிசி, தமிழ்நாடு கொடிக்கால் விவசாயிகள் சம்மேளனம்)

நாட்டின் முதுகெலும்பு போன்றது தொழில். உற்பத்தித் தொழிலாகவும், விற்பனைத் தொழிலாகவும், அது இருகூறுகப் பிரிந்து செழித்து வளர்ந்துள்ளது. அதில் உற்பத்தித் தொழிலான விவசாயத்தில்தான் கோடிக்கணக் கானவர்கள் ஈடுபட்டு, உற்பத்தியைப் பெருக்கி நாட்டை வளமாக்கப்பாடுபட்டு வருகின்றனர்.

அத்தகைய விவசாயத்தின் ஒரு பகுதியாக, தமிழகத்தின் தனிப்பெரும் தொழிலாக, சுமார் 10 லட்சம் விவசாயிகள் ஈடுபட்டு ஓயாது உழைத்து, உழைப்பிற்குத் தக்க ஊதியமற்றதாக, நாதியற்ற தொழிலாக இன்று இருந்து வருவது "கொடிக்கால் தொழில்"

நாட்டிலே நடக்கும் நல்ல காரியங்கள் அத்தனைக்கும் முதலில் தேடி விரும்பப்படுவது வெற்றிலே. தென்னுட்டை வடநாட்டார் சுரண்டுவதாகக் கூறப்படும் இந்நாளில், தினம் 1 க்கு ஆயிரக்கணக்கான கூடைகளை ஏற்றுமதி செய்து லட்சக்கணக்கான பணத்தை வடநாட்டிலிருந்து தென்னுட்டுக்குச் சுரண்டிக் கொண்டு வருவது வெற்றிலே. மனித சமுதாயம் நோயின்றி வாழ தேவையான, இரும்பு சத்துக்களை (Iron Tonic) தன்னகத்தே கொண்டதும் வெற்றிலே. இத்தகைய வெற்றிலேயை மக்கள் சமுதாயத்திற்குக் கொடுப்பது கொடிக்கால் தொழில்.

அத்தகைய தொழிலின் நிலே என்ன? அதை உற்பத்தி செய்யும் லட்சோபலட்சம் விவசாயிகள் வாயில்லாப் பூச்சிகள் போன்று வாழ்வது ஏன்? கொடிக்கால்தொழில் செழிக்க, சிறப்புற நடக்க, கொடிக்கால் தொழிலாளியின் வாழ்க்கைத்தரம் உயர வழி என்ன? கொடிக்கால் தொழிலே தடைசெய்வது எது? அரசாங்கத்தின் உதவியும் பாதுகாப்பும் எந்த அளவுக்குத் தேவை? இவைகளை விளக்கும் கட்டுரை "தொழில்" இதழில் தொடர்ந்து வெளிவரும்.

தினசரி உணவுடன் உண்பதற்கு உகந்த

பழனி காந்திலால் ஊறுகாய்

உபயோகித்தீர்களா ?

★

இல்லேயேல் உங்கள் ஊரில் உள்ள கடைகளில்

காந்திலால் ஊறுகாய் கேட்டு வாங்கிச் சாப்பிட்டு ருசி பாருங்கள்

மிகச் சிறந்தது

காந்திலால் ஊறுகாய் ஒன்றே !

M. KANNAN

Government Approved Fabricator and Contractor

(Regd. 10)

No. 30, Wall Tax Road, Madras-3.

Please Contact us for Collapsible Gates, Main Gates,
Window Grills, Ventilators and all other
Building materials.



COLLAPSIBLE GATE



MAIN GATE

Steel Trusses and erection works undertaken.

Specialist in Arc and Gas welding.

Stainless Steel, Aluminium Gas cutting works
are also undertaken.

★

OUR MOTTO IS TO SATISFY OUR CUSTOMERS.

ராசி பலன்

வி. வெங்கட்ராமன்

சுக்	ச பு கே	கு	
செ	16—5—58 முதல் 31—5—58 வரை		
	இராசி		
	சனி	ராகு வி	

மேஷம்

(அசுவணி பரணி கார்த்திகை ¼)

இந்த ராசிக்காரருக்கு:—செவ்வாய் பலமாக 11-ம் வீட்டிலிருப்பதிலும் குரு 7-ம் வீட்டிலிருப்பதிலும், சந்திரன் முதல் 2 தினம், சஞ்சாரம் செய்யும், சமயம், மன அமைதியாக இராது. செவ்வாய் பலமாக லாபஸ்தானத்திலிருப்பதினுல், உத்தியோகம் தொழில், சினிமா, சங்கீதம், ஆகியவற்றில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும், அரசாங்க மூலம் வேலே செய்கிறவர்களுக்கும், புகழ், கீர்த்தி, புதிய சினேகிதம், வெளிபிரயாணங்கள், அதனுல் லாபகரமான திரவியங்கள் சேரும். குரு ராகு இரண்டு கிரகங்கள் 7-ம் வீட்டிலிருப்பதினுல், குடும்பசுகம, விவாகம், புதிய சினேகம், சவுகரியங்கள் கட்டுப்பாட்டுடன் ஒழுங்காகநடந்துவரும். ஆனுல் சில சமயம் சனிபகவான் சஞ்சாரம் செய்வது கஷ்டமும், நஷ்டமும், வீண் திரவிய கஷ்டங்களும் அடிக்கடி ஏற்படும். முடிவில் குரு, செவ்வாய் இருவரும் பலமாக இருப்பதினுல், கஷ்டங்களே பொறுப்புடன் நிர்வகிக்க சரிவரும். அதிர்ஷ்ட நாள். 21, 22, 27, 28, 29.

ரிஷபம்

(கார்த்திகை ¾ ரோகிணி 1 மிருகஷீரிஷம் ½)

இந்த ராசிக்காரருக்கு:—தர்மகர்மாதிபதி சனி வீட்டிலும், செவ்வாய் தசமத்திலும் சுக்கிரன் இவர்கள் பலமாக இருப்பதினுல், தொழில் சினிமா, சங்கீதம், உத்தியோகம் செய்கிறவர்களுக்கு சுகமும் கஷ்டமும் கலந்து அனுபவிக்கவரும். ஆயினும் தைரியம், எதிர்பாராத வகையில் புதிய நண்பர்கள் மூலம் உதவி ஏற்படும் வெளியூர் பிரயாணம், யாத்திரை போகவும் ஏற்படும். கஷ்டங்கள் ஏற்பட்டாலும், குரு, ராகு பலமிருப்பதினுல் பணம் கடன் வாங்கவும், வாங்கிய கடன் தொந்தரவு தரவும் இவைகள் கலந்து நடந்து வரும். பணக் கஷ்டம் அடிக்கடி வந்து தீரும். உடன் சரிபோகும். அதிர்ஷ்ட நாள். 24, 25, 29, 30, 31.

மிதுனம்

(மிருகசீரிஷம் ½ திருவாதிரை 1 புனர்பூசம் ¾)

இந்த ராசிக்காரருக்கு சூரியன் குரு, சனி, செவ்வாம் இந்த நான்கு கிரகங்களும் பலமாக இருப்பதினுல் சுபயோகம், சுப விவாகம், யாத்திரை சிலவுகள் புதிய சினேகிதம் நண்பர்கள் உதவிகள், அதனுல் நல்ல ராஜ யோக பலன் நடக்கும். உத்தியோகம், தொழில், சங்கீதம், சினிமா இவைகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு கீர்த்தி, புகழ், பெரியோர் சன்மானம், அதிக வருமானம் நூதன கட்டிடம், மண், மனே, வாங்கவும் ரிப்பேர் செய்யவும் குடும்பத்தில் அன்யோன்யமாக மனமொத்து தாம்பத்யமாக சுகபோகமாக வாழ்க்கை தரமாக வாழவும், அரசாங்க ஜீவனம் வகிப்பவர்கள், அந்நியநாடு போகவும், அங்கே உல்லாசமாக வாழவும் சரிபோகும். அதிர்ஷ்ட நாட்கள். 16, 17, 26, 27, 31.

கடகம்

(புனர்பூசம் ¼ பூசம் 1 ஆயில்யம் 1)

இந்த ராசிக்காரருக்கு:— சூரியன் நீங்கலாக பாக்கி சகல கிரகங்களும் சாதகமாக நலமாக சொல்வதற்கு இல்லே. மனம் அமைதியாக இருக்க சரிவராது. குரு-4. சனி-5. செவ்வாய்-8. இவர்களிருப்பதில் தனிப்பட்ட முறையில் புகழ். தன்நம்பிக்கை நாணயமாக வாழ்க்கை நடக்க கஷ்டம் துக்கம் இவைகள் கூடவே வரும். ஆயினும் சூரியன் தசமத்தில் பலமாக இருக்கிறதினுல் ஓர் அளவு நிர்வாகம், ஸ்திரமாக நடக்கும். சினிமா, தொழில், சங்கீதம், செய்

கிரவர்களுக்கு நல்ல மாதிரியாக பலன் சொல்வதிலும் சரி இல்லை. சுகமும் சோர்வும் கூடவே நடந்துக்கொண்டிருக்கும். அதிர்ஷ்ட நாட்கள். 19, 20, 28, 29, 30,

சிம்மம்

(மகம் பூரம் உத்திரம் ¼)

இந்த ராசிக்காரருக்கு:—முதல் இரண்டு நாட்கள் கஷ்டமான நாட்கள். செவ்வாய்,சனி குரு இவர்கள் சரி இல்லை. சூரியன் தசமத்தில் நின்றது ஓர் அளவு சுகம், சவுகரியம் உண்டாகும். ஜீவனம், தொழில், சினிமா, சங்கீதம், செய்கிறவர்கள், பணக் கஷ்டம் வருமான தாமதம், குடும்பம் கலகம், விரோதம், சுற்றம், நண்பர்கள் இவர்களில் அடிக்கடி விரோதம், கோர்ட், வீண்வழக்கு, விரயம் இவைகள் நேரிடும். திசாபுக்தி பலமாக இருக்கிற நண்பர்கள் யாவும் தைரியமும் உர்சாகத்துடன் நிர்வகிக்க ஏதுவாகும் சர்வசாதாரணமாக சகல விவகாரங்களும் நன்மையாகவே முடிவு பெறும். முன் எச்சரிக்கையாக நடப்பது நலமாகும். அதிர்ஷ்ட தினம். 21, 22, 23, 29, 30, 31.

கன்னி

(உத்திரம் ¾ அஸ்தம் கிருத்திகை ½)

இந்த ராசிக்காரருக்கு:—கவனிக்குமளவில் குரு சனி செவ்வாய் மூவரும் பலமாக இருக்கிறபடியால் புதிய முயற்சி விவகாரங்கள் சாதகமாக அடையவரும். தொழில், ஜீவனம், சினிமா, சங்கீதம் இந்த வழியில் ஈடுபடுப் நண்பர்கட்கு போதிய வருமானம், சினேகிதம், வீடு, வாகனம், கார் இவைகள் புதிய முறையில் ஈடுபடவும் நண்பர்கள் உதவி, இடம் மாறுதல் இவைகளில் நன்மை உண்டாகும். வியாபாரிகள் புதிய வியாபாரம் கூட்டு வழியில் ஆரம்பம் செய்யவும் ஏற்படும். சில சமயம் பணம் கஷ்டம் தாமதம் உண்டாகும். திசாபுத்தியும் பலமாக இருந்தால் நல்ல பலன்கள் வருமானம் அதிகமாக புதிய வழியில் உண்டாகும். அதிர்ஷ்ட தினம் 23, 24, 25, 30, 31.

துலாம்

(சித்திரை ½ சுவாதி 1 விசாகம் ¾)

இந்த ராசிக்காரர்களுக்கு, முதல் ஆரம்பம் இரண்டு தினம் லாபகரமான தினமாகும், குரு, சனி, செவ்வாய் இவர்கள் சரி இல்லை. நல்லதும் கெடுதலும் கலந்து அனுபவிக்க நேரிடும். தொழிலில், கூலி வேலை சங்கீதம் உத்யோகம் செய்யும் நண்பர்களுக்கு அடிக்கடி ஸ்தான பேதம், வீடு, வாகனம் இவைகள் மாறுபட்டு வாழவும் சமய சந்தர்ப்பம் உண்டு. குடும்பத்தில் அடிக்கடி கலகம், வீண் கோர்ட்டு வழக்கு இவைகள் ஏற்படும். திசாபுத்திகள் பலமாக நடக்கும் நண்பர்களுக்கு கூடுமானவரையில் நிர்வாகம் திறம்பட நடக்க சாமர்த்தியமும் சந்தர்ப்பமும் உண்டாகும். அதிர்ஷ்ட தினம்: 23, 24, 26, 27.

விருச்சிகம்

(விசாகம் ¼ அனுஷம் கேட்டை)

இந்த ராசிக்கார்களுக்கு முதல் 2, 3 தினங்கள் நல்ல யோகமாக நடக்கும். இடையில் ராசியர்பதியின் செவ்வாய் சனி, குரு இவர்கள் சரியர்ன நிலைமையில் யோக பலன்கள் தரக்கூடிய நேரமாக இருக்கவில்லை. சூரியன் நீங்கலாக நல்ல பலன் தர இல்லை. உத்தியோகம், ஜீவனம், தொழில், சினிமா, சங்கீதம் செய்யும் நண்பர்களுக்கு அடிக்கடி இடம் மாறுதல் ஏற்படும். குடும்பத்தில் வீண் கலகம் அசம்பாவிதமாக உண்டாகும். மேல் அதிகாரிகள் பகைமைக்கு வீணாக பழிபாவம் சுமத்தவும் மறைமுகமாக சந்தேகம் இவைகள் ஏற்படுதலும், கிரிமினல் வழக்குகளில் ஈடுபடவும் செய்யவும். தன்மானம் சுயநம்பிக்கை இல்லாமல்படிக்கு கஷ்டத்தை நிர்வகித்து வாழ்வதற்கு ஏற்படும். பின்பாதியில் 2 நாள் சந்தோஷமாக இருக்கும். அதிர்ஷ்ட தினம், 16, 17, 28, 29, 30. கெட்ட நாட்கள் 21, 22 சந்திராஷ்மம்.

தனுசு

(மூலம் பூராடம் உத்திராடம் ¼)

இந்த ராசிக்காரர்களுக்கு குரு, செவ்வாய், சூரியன் பலமாக இருக்சிறபடியால் புதிய நண்பர்கள் சினேகிதம், அவர்கள் மூலம் திரவியம், பொன், ஆபரணம், வஸ்திரப் பிராப்திகள் வாங்கவும், உல்லாசமாக வாழ்க்கை தரம் உயர்ந்து வாழ சரிபோகும். சினிமா, சங்கீதம், உத்யோகம், வியாபாரம் செய்யும் நண்பர்களுக்கு அதிக வருமானம், வெளியூர் உல்லாச பிரயாணம், யாத்திரை தெய்வ வழிபாடு இவைகள் திடும்பிரவேசமாக வாய்ப்பு ஏற்படும். ஆயினும் சனி பகவானல் சில சமயம் மன திருப்திக்கு அமைதி

உண்டாகாது. நிர்வாகம் சரியாக நடக்கும். முன் பாதியில் முதல் இரண்டு நாட்கள் சென்றபின் வெளியூர் பிரயாணம், உத்யோகம் செய்கிறவர்களுக்கு உத்யோகத்தில் உயர்வு, சம்பளம் அதிகம் வாங்குல் முதலிய அம்சங்கள் ஏற்படும். அதிர்ஷ்ட தினம், 19, 20, 29, 30, 31. கெட்ட நாட்கள்-24, 25 சந்திராஷ்டாயம்.

மகரம்

(உத்திராடம் ¾ திருவோணம் அவிட்டம் ½)

இந்த ராசிக்காரர்களுச்கு ராசிநாதன் சனி பலமாக 11-ம் வீட்டிலிருப்பதிலும், குரு 10-ம் வீட்டிலிருப்பதிலும் பெரியோர்கள், சிநேகிதம் அவர்களால் வருமானம், கொடுக்கல் வாங்கல், கோர்ட் மூலம் போக வரவும் உண்டாகும். சினிமா, சங்கீதம், உத்யோகம் தொழில் செய்யும் நண்பர்களுக்கு, வெளியூர்போக வருதலும், ஜீவனம் தொழில் செய்யும் நண்பர்கள் வெளியூர் போக, வரவும் மாதமால வருமானங்ளும் அன்னியர்கள் மூலம் புதிய வருமானம், வாகனம், கார், கட்டிடம் வீடு லாபகரமும் இடம் மாறுபட்டு வாழ்க்கைத் தரமாக செய்யவும் வசதி உண்டாகும். சமய சந்தர்ப்பம் தெரிந்து சாமர்த்தியமாக நடந்துக்கொள்ளும் திறமை ஏற்படும். அதிர்ஷ்ட நாட்கள்: 21, 22, 23, 30, 31. கெட்ட நாட்கள்: 26, 27 சந்திராஷ்டயாம்.

கும்பம்

(அவிட்டம் ½ சதயம் பூரட்டாதி ¾)

இந்த ராசிக்காரர்களுக்கு குரு, சனி இருவரும் பலமாக இருக்கிறார்கள். ஜென்மத்தில் செவ்வாய் சஞ்சரிப்பதில் சில சமயம் மனவிரக்தி, தேக உஷ்ணம், சீதளம் இவைகள் ஏற்படும். ஆனால், குருவின் பலத்தினல் சகலமும் நன்மையாக உண்டாகும். சினிமா, சங்கீதம், தொழில் உத்யோகம் செய்யும் நண்பர்களுக்கு ஜீவனம் மகிழ்ச்சி லாபகரம், சுப விவாகம், பிரயாணம், நல்லவழியில் தேவாலயம். புண்யமான சிலவு வரும். சினிமா சங்கீதம் செய்யும் நண்பர்களுக்கு புதிய சிநேகிதர்கள் பழக்கம், வெளியூர் போக பணம் சம்பாதிக்கவும் திறமையுடன் உழைத்து அதனுல், வீடு, வாகனம், கார், இவைகள் வாங்கவும் லாபம் ஏற்படும். உதவி தெய்வீகமாக ஏற்படும். அதிர்ஷ்ட நாட்கள்: 16, 17, 18, 24 25. கெட்ட நாட்கள்: 27, 28 சந்திராஷ்டாயம்.

மீனம்

(பூரட்டாதி ¼ உத்திரட்டாதி ரேவதி)

இந்த ராசிக்காரர்களுக்கு யோகாம்சம் கவனிக்குமளவில் முன், 2 நாட்கள் நீங்கலாக 2, 3, தினம் சந்தோஷமாக சொல்ல வாய்ப்பு உண்டு. செவ்வாய் 12-ம் வீட்டிலும், குரு, 8 லும், சனி 9ம் வீட்டிலுமிருப்பதில் இவர்கள் வாழ்க்கைத் தரம் உயர்வுக்கு கொஞ்ச நாள் பொருத்திருக்கவேண்டும். யோகமாக திசாபுத்தி நடப்பவர்களுக்கு பலவித இன்னல்களிலுமிருந்தும் தப்பி வாழ வழியுண்டாகும். ஜீவனம் சரிவராது. குடும்பம் அடிக்கடி கலகம், வீண் வழக்கு மூலம் கலகம், கோள் உண்டாகும். சூரியன் பலமாக இருப்பதில் ஓர் அளவு கொஞ்சம் சவுகரியம் உண்டாகும். யோகவந்தன் சரியாக இல்லாதபடியால் எதிலும் சுகம் வாய்ப்பு தாமதமாகும். ஜீவனம் தொழில், சங்கீதம், சினிமாவில் ஈடுபடும் நண்பர்களுக்கு வாழவும் சிலவுக்கு சரிபோகாமல்படி கடன் வாங்கி கடன்கொடுத்து வாழ்வதற்கு சரிபோகும். அதிர்ஷ்ட நாட்கள் 18, 19, 20, 26, 27. கெட்ட நாட்கள்: 29, 30 சந்திராஷ்டமம். சுபம்.

(28-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுமைப் படுத்தும் போது சூடுகொடுக்க! என்ன இருந்தாலும் பழைய சிங்கமல்லவா?

மருதகாசி எழுதியுள்ள "இன்பமே பொங்குமே!" என்றபாட்டையும், "அன்பே நீ அங்கே! நான் இங்கே!" என்ற பாட்டையும் ஜிக்கியும் ராஜாவும் பாடியுள்ளனர். கேட்க இனிமையாக இருக்கிறது.

"வசந்தகாலம் இத்தனை தானு!" என்ற பாட்டை நாராயணகவி இயற்றியுள்ளார். நல்ல இசை அமைப்புடன் கூடிய இந்தப் பாட்டை ஜிக்கி உணர்ந்து பாடியுள்ளார். நல்ல கருத்தையும், அதே சமயத்தில் கேட்க இனிமையாகவும் உள்ள இந்தப் பாட்டு ரசிகர்களின் இதயத்தை மிகவும் கவர்ந்துவிடும்.

மருந்து சுவையாக இருப்பதில்லை. இருப்பினும் உடம்புக்கு நல்லதல்லவா? அருணா பிலிம்ஸாரின் பொம்மைக கல்யாணம் பார்ப்பதற்கு சலிப்புத்தட்டினாலும் நல்ல கருத்தை வலியுறுத்தி இருக்கின்றனர். கல்யாணம் ஆயிரங்காலத்துப் பயிர்! அந்த உண்மையை உணரவேண்டுமானல் பொம்மைக்கல்யாணத்தை அவசியம் குடும்பத்துடன் பார்க்கத்தான் வேண்டும்.

JL
3M211, N58T0 N58.1.2
144847.

விமர்சனம் :

'பொம்மைக் கல்யாணம்'

இந்திப் படத் தயாரிப்பாளர்களிடமிருந்து கதையைக் கடன்வாங்கி பொம்மைக்-கல்யாணத்தை முடித்திருக்கின்றனர் அருணா பிலிம்ஸார். கடன் வாங்கியும் பட்டினி; கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரி என்பார்கள். அது அருணா-பிலிம்ஸாரைப் பொறுத்த வரை உண்மையாகி விட்டது.

கடன் வாங்கி செய்யப்பட்ட பொம்மைக் கல்யாணத்தில் எதுவுமே புதுமை இல்லை என்பது மட்டுமல்ல; கதைக்கும் தலைப்புக்கும் சம்பந்தமே இல்லை. பாவம் அருணா பிலிம்ஸார்!

கண்ணனும் (சிவாஜி) ராதையும் (ஜமுனா) சந்திக்கும் காட்சியும், அவர்களிடையே பந்து தூதுபோகும் காட்சியும் சுவையாயிருக்கிறது. ஆரம்பத்தில் இருந்த இந்தச் சுவை போகப் போக குறைந்து சலிப்புத் தட்டுகிறது. ஏன்?

நல்ல கருத்தை அடிப்படையாகக்கொண்டுள்ள கதையாக இருந்தும், பல குணசித்திர நடிகர்கள் நடித்தும் படம் சலிப்புத்தட்டுகிறது என்றால் அதற்கு யார் பொறுப்பு?

டைரக்டர் சிறிது கவனம் செலுத்திஎடுத்திருக்கலாம்.

தன்னைத் தேடிவந்த கணவன் கண்ணனை பார்க்க ஓடிவரும் போது அவள் தோழி தடுத்து முகத்தை அலங்கரித்துக் கொண்டு போ என்று சொன்னதும் உள்ளத்தில் பொங்கி எழும் மகிழ்ச்சியில் எதைச் செய்வது என்று சீப்புக்குப் பதிலாக பொம்மையை எடுத்து தலைவாரப் போகும் ராதையின் உள்ளப்பாங்கை அருமையாகக் காட்டி இருக்கிறார் டைரக்டர் கிருஷ்ணசாமி.

சுபேதார் நாகமுத்துவாக வருகிறார் ரங்கா ராவ்! அடேயப்பா! பொல்லாத மனிதராய் இருக்கிறார் நடிப்பில். பெண்ணாயிற்றே என்று பார்க்கிறேன். இல்லை என்றால்...என்ற தம்முடைய கோபத்தை; கைவைத்திருக்கும் நாற்காலியை நொறுக்குவதின்மூலம் அவர் காண்பிக்கும்போது அய்யோ! நமக்கே பயமாய் இருக்கிறது. படத்திற்கே அவர் நடிப்பு ஜீவனளிக்கிறது. ஜமுனா முற்பகுதியை விட பிற்பகுதியில் நன்றாக சோபிக்கிறார். கணேசன்; அவருடைய திறமையை வைத்து எடை போடும் போது மிகச்சாதாரணமாகத் தான் நடித்திருக்கிறார். மற்றவர்களின் நடிப்பு குறையில்லை. மைனாவதியை மிகைப்பட நடிக்க வைத்து விட்டனர்.

கலைஞர் சுந்தரத்தின் வசனம் படத்துக்கு உயிர்நாடி. அழகுத் தமிழில் எளிய நடையில் துல்லிதமாக அமைத்திருக்கிறார். விருந்தாளியாக வந்த சோணாசலத்தை கட்சிக்காரர் என்று குமாஸ்தா கேள்வி கேட்டு பீஸ் கேட்கும் கட்டம் அவருடைய நகைச்சுவை வசனத்துக்கு ஒரு சிறப்பு, "கட்டிய மனைவியை கைவிடாமல் இருப்பவனே மனிதன்" என்ற அந்த ஒரே சொற்றொடர் போதாதா தற்காலத்தவர் தம் மனைவியைக்

(27-ம் பக்கம் பார்க்க)

Edited & Published by K. Perumal Udayar, 55, Edapalayam Street, Madras-3.
Printed by K. N. Thiruvengadam, at his Ananda Parvathi Press, 30, Edapalayam Street, Madras-3.